# கொழும்பு பல்கலைக்கழகத்துடன் இணைந்த உயிரியல்ரசாயண, நுண்ணுயிரியல், உயிரியல் தொழில்நுட்ப நிறுவகம் - 2012

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

2012 திசெம்பர் 31 இல் உள்ளபடி உயிரியல்ரசாயண, நுண்ணுயிரியல், உயிரியல் தொழில்நுட்ப நிறுவகத்தின் நிதி நிலைமை மற்றும் அத்தினத்தில் முடிவுற்ற ஆண்டிற்கான அதன் செயற்பாடுகளிலிருந்தான நிதிசார் செயலாற்றல் மற்றும் காசோட்டம் என்பவற்றை நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கின்றன என்று நான் அபிப்ராயப்படுகின்றேன்.

### 1.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.2.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான கொழும்பு பல்கலைக்கழகத்துடன் இணைந்த உயிரியல்ரசாயண, நுண்ணுயிரியல், உயிரியல் தொழில்நுட்ப நிறுவகத்தின் நிதிக்கூற்றுக்கள் 2013 பெப்ரவரி 28 ஆந் திகதி கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு செய்யப்பட்ட பின்னர் 2013 மே 30 ஆந் திகதி வரைபு அறிக்கை வழங்கப்பட்டது. வரைபு அறிக்கையின் மூலம் சுட்டிக் காட்டப்பட்டிருந்த ரூபா 3,673,838 ஆன கணக்கீட்டுக் குறைபாடுகள் சீராக்கப்பட்டு திருத்திய நிதிக்கூற்றுக்கள் 2013 யூன் 18 ஆந் திகதி சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

#### 1.2.2 பெறவேண்டிய மற்றும் செலுத்தவேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) அனுசரணையாளர்களிடமிருந்து கிடைக்க வேண்டியவையாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்த ரூபா 22,840 மீதி 2009 ஆம் ஆண்டிலிருந்து அறவிடப்படாது காணப்பட்டு வருவதுடன் அதனை அறவிடுதற்கு அல்லது நிறுவனப் புத்தகங்களிலிருந்து பதிவழிப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) கொழும்பு பல்கலைக்கழகத்தின் விஞ்ஞான பீட பூங்கா அலங்கரித்தல் செயற்திட்டத்தின் போது பல்கலைக்கழகத்திற்கும் நிறுவனத்திற்குமிடையே தகவல்கள் பரிமாற்றம் செய்யப்படும் கம்பி வழிக்கு (Data Cable) சேதம் ஏற்பட்டிருந்ததுடன் அது ஒப்பந்தகாரரின் தவறின் காரணமாக ஏற்பட்டிருந்தது.

இதனை பழைய நிலைக்கு கொண்டுவருவதற்காக நிறுவனத்தினால் ரூபா 284,000 செலவிடப்பட்டிருந்ததுடன் குறித்த நட்டம் ஒப்பந்தகாரரிடமிருந்து கொழும்பு பல்கலைக்கழகத்திற்கு கிடைத்திருந்த போதிலும் நிறுவனத்திற்கு அறவிட்டுக் கொள்வதற்கு இது வரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்கி ஒழுகாமை

பின்வரும் இணங்கி ஒழுகாமைகள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுக்கான தொடர்பு | இணங்கி ஒழுகாமைகள் |
|---|---|
| (அ) இலங்கை அரசாங்கத்தின் நிதிப்பிரமாணம்<br>நி.பி. 371 | முற்பணங்களை வழங்குகையில் பதவிநிலைச் சேவை உத்தியோகத்தர்களிற்கு மட்டுப்படுத்தப்பட வேண்டிய போதிலும், 09 சந்தர்ப்பங்களில் ரூபா 252,023 மொத்தமான முற்பணங்கள் மூன்றாம் தரப்பினர்களிற்காக வழங்கப்பட்டிருந்தன. |
| (ஆ) நி.பி. 1646 மற்றும் 2010 திசெம்பர் 07 ஆந் திகதிய 150 ஆம் இலக்க தேசிய பாதீட்டுச் சுற்றறிக்கை | (i) ஓட்டப் பதிவேடுகளிலுள்ள எரிபொருளைச் சமப்படுத்துவதற்கான பயணித்த தூரம் தொடர்பில் பரிசோதனையினை மேற்கொள்ளாது, 2012 ஜனவரி முதல் ஒக்தோபர் வரை வாடகை அடிப்படையில் பெற்றுக்கொண்டிருந்த வாகனங்களிற்காக ரூபா 495,000 தொகை செலவு செய்து 1393 லீற்றர் எரிபொருள் வழங்கப்பட்டிருந்தது.<br>(ii) வாடகை வாகனங்களை அகற்றுவதற்காக முன்னுரிமை வழங்கப்பட்டிருக்கையில் அதற்கு முரணாக செயற்பட்டு 2011 ஒக்தோபர் 27 ஆந் திகதி வாடகை வாகனமொன்று பெறப்பட்டு சாரதியின் சம்பளம் அடங்கலாக வாகன வாடகையாக மாதத்திற்கு ரூபா 63,000 வீதம் 2012 நொவம்பர் வரை மொத்தம் ரூபா 819,000 செலுத்தப்பட்டிருந்தது. |

| | |
|---|---|
| (இ) 2002 நொவம்பர் 28 ஆந் திகதிய ஐஏஐ/2002/02 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை | கணனிப் பாகங்கள் மற்றும் மென்பாகங்கள் தொடர்பில் பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) 1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை | சகல நிலையான சொத்துக்களிற்காகவும் 287 ஆம் படிவத்தின் பிரகாரம் நிலையான சொத்துக்கள் பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை. |
| (உ) தேசிய ஆவணமாக்கல் சேவைகள் சபையின் 2004/தேநூ/1 ஆம் இலக்க அறிவுரைச் சுற்றறிக்கையின் 03 ஆம் பந்தியின் 3.1 ஆம் உப பிரிவு | நூலகப் புத்தகங்கள் வருடாந்தம் மெய்மையாய்வு செய்யப்பட வேண்டிய போதிலும், நூலகத்தின் ஆரம்பம் முதல் 2013 மே 30 ஆந் திகதி வரை புத்தகங்கள் தொடர்பில் மெய்மையாய்வு செய்யப்பட்டிருக்கவில்லை. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் படி, 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான நிறுவகத்தின் நிதி விளைவுகள் மீண்டெழும் செலவினத்திற்கான அரசாங்க மானியத்தைக் கணக்கிலெடுக்க முன்னர் ரூபா 34,020,282 பற்றாக் குறையொன்றானதுடன் அதனையொத்த முன்னைய ஆண்டுக்கான பற்றாக்குறை ரூபா 34,711,852 ஆகும். மீண்டெழும் செலவுகளுக்கான ரூபா. 37,568,028 அரசாங்க மானியத்தைக் கணக்கிலெடுத்த பின்னர் மீளாய்வாண்டிற்கான நிதி விளைவுகள் ரூபா. 3,547,746 மிகையொன்றாகியிருந்ததுடன் முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினங்களுக்கான ரூபா 35,588,306 அரசாங்க மானியம் காரணமாக அவ்வாண்டில் ரூபா 876,454 மிகை ஏற்பட்டிருந்தது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் அரசாங்க மானியம் ரூபா 1,979,722 ஆலும் உழைத்த வருமானம் ரூபா 994,749 ஆலும் அதிகரித்திருந்தமையே மீளாய்வாண்டின் ரூபா 2,671,292 வளர்ச்சிக்கு பிரதானமாக தாக்கமளித்திருந்தன.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றுகை

மீளாய்வாண்டில் நிறுவகத்தினால் தத்துவவியல் முதுமானி மற்றும் தத்துவவியல் கலாநிதி என்ற 02 பட்டப்பின்படிப்பு பாடநெறிகளும் 03 விஞ்ஞான முதுமானிப்

பாடநெறிகளும் நடாத்தப்பட்டிருந்ததுடன் அதன் படி 05 பட்டப்பின்படிப்பு பாடநெறிகள் நடாத்தப்பட்டிருந்தன.

கடந்த ஆறு ஆண்டுகளில் மாணவர்களைச் சேர்த்துக் கொள்ளல் மற்றும் பட்டங்களைப் பெற்று வெளியேறல் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்பட்டுள்ளன.

| ஆண்டு | பதிவு செய்யப்பட்ட மாணவர்கள் | இறுதியாக பரீட்சைக்குத் தோற்றிய மாணவர் எண்ணிக்கை | குறைச் சித்தி | சித்தியடையாத மாணவர் எண்ணிக்கை | பாடநெறிகளை கைவிட்டுச் சென்றோர் |
|---|---|---|---|---|---|
| 2007 | 12 | 13 | 02 | - | 01 |
| 2008 | 18 | 10 | - | 01 | 02 |
| 2009 | 13 | 12 | 04 | - | 02 |
| 2010 | 20 | 11 | 03 | - | 02 |
| 2011 | 10 | 18 | 04 | 02 | 01 |
| 2012 | 29 | 12 | 01 | - | 01 |

### 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மை

நிறுவகம் நடாத்திச்செல்லப்படும் கட்டிடம் அமைந்துள்ள கொழும்பு பல்கலைக்கழகத்திற்கு உரித்தான காணியினை கையேற்பதற்கு 2013 யூலை வரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அதனால் நிதிக்கூற்றுக்களில் காணி மற்றும் நிறுவகக் கட்டிடத்தின் பெறுமதிகள் காட்டப்படாதிருந்ததுடன் அது தொடர்பில் வெளிக்காட்டல்களும் செய்யப்பட்டிருக்கவில்லை.

### 3.3 பயன்படுத்தாத மற்றும் குறைவாகப் பயன்படுத்திய சொத்துக்கள்

பின்வரும் அவதானிப்பகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) 22 –BECRMION TC 100 UL TRA CENTRIFUGE இயந்திரம் 03 ஆண்டுகளாகவும் J 2 HS- Centrising இயந்திரம் ஏறத்தாழ 1 ½ ஆண்டுகளாகவும் செயற்பாடற்றுக் காணப்பட்டமையால் பயன்பாட்டிலிருந்து அகற்றப்பட்டிருந்ததுடன் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) நிறுவகத்தினால் பேணப்பட்டு வருகின்ற இரண்டு வங்கி நடைமுறைக் கணக்குகளில் ரூபா 245,796 மீதியொன்று மிக நீண்டகாலமாக பயன்பாடற்றுக் காணப்பட்டது.

## 4. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வில் அவதானிக்கப்பட்ட முறைமைகளினதும் கட்டுப்பாடுகளினதும் குறைபாடுகள் அவ்வப்போது நிறுவகப் பணிப்பாளரின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டிருந்தன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் தொடர்பில் விசேட கவனம் கோரப்படுகிறது.

(அ) நிலையான சொத்துக்கள்

(ஆ) முற்பணங்கள்

(இ) நூலக நிர்வாகம்